**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | திரு. அருண்பாண்டி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.06.2022**

**முதல் விசாரணை :**

நான் செக்கானூரனியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். எனது அக்கா சிவப்பிரியா இறந்துவிட்டார். 04.02.2017 அன்று எனது அக்கா இறந்துவிட்டார். எனது அப்பா இறந்து சுமார் 3,6 மாதங்களிலேயே எனது அக்காவை, எனது அத்தை பசும்பொன் பெண் கேட்டார். ஊர் பெரியவர் கழுவத்தேவரும் வந்து பெண்கேட்டார். வருஷம் திரும்பட்டும் என்று எனது அம்மா சொன்னார். இல்ல, உடனே கட்டிக்கொடுக்கனும் என்று எனது அத்தை சொன்னார். 07.09.2016 ம் தேதியன்று தனலெட்சுமி மகாலில் வைத்து, எனது அக்காவுக்கும், விருமாண்டிக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணத்திற்கு எனது அக்காவுக்கு, 30 பவுன் நகையும், 3 லட்சம் சீர் வரிசை பொருட்களும் நாட்டு நடப்புப்படி செய்தோம். கல்யாணம் நடந்து 2 மாதத்தில் எனது அக்கா மாசமாக இருந்தார். அப்போது எனது அக்காவிடம் நகை கேட்டு அவரது மாமியாருக்கும், எனது அக்கா சிவப்பிரியாவிற்கும் சண்டை வந்து கொண்டே இருந்தது. அப்போது 1 வது எதிரி விருமாண்டி எனது அக்காவின் நகைகளை

அடகு வைக்கச் சொல்லியும், வட்டிக்கு விடவேண்டும் என்று சொல்லி கேட்டுள்ளார். அதனால் எனது அம்மா வந்து, 7 மாதம் ஆகட்டும். வளைகாப்பு முடியட்டும் என்று சொன்னார். அப்போது எனது அக்கா சிவப்பிரியா 4 மாதம் கர்ப்பமாக இருந்தார். 7 மாதத்தில் எனது அக்காவிற்கு வளைகாப்பு முடிந்த பிறகு, நகைகளை அடகு வைக்கலாம் என்று எதிரிகள் சொன்னார்கள். அதற்கு பிறகு இடையில்ஒருநாள், அவர் சாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, நகை கேட்டு அவரது கணவர் விருமாண்டியும், அவரது மாமியாரும் பிரச்சனை செய்வதாக சொல்லி கோவித்துக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தார். அத்தை ஈஸ்வரியும், அத்தை மகள் சிவரஞ்சனியும், மாமா நாகேந்திரன், பாரி, குணசேகரன், விருமாயி ஆகியோரை வைத்து பஞ்சாயத்து பேசி இனிமேல் எதிரிகள் நகை கேட்க மாட்டார்கள் என்றும், ஈஸ்வரி தான் பொறுப்பேற்றுக்கொள்வதாகவும் சொல்லி எனது அக்காவை 1 வது எதிரியின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அக்கா இறப்பதற்கு முன்பு இரவு சுமார் 08.00, 08.30 மணிக்கு எங்களுக்கு போன் செய்து, மீண்டும் நகை கேட்பதாக சொல்லி போன் செய்தார். மறுநாள் காலை 04.02.2017 அன்று காலை சுமார் 08.30 மணிக்கு எனக்கு எனது அக்கா சிவப்பிரியா போன் செய்து தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லுமாறும், நகை கேட்டு வீட்டில் பிரச்சனை செய்கிறார்கள் என்றும் சொன்னார். சுமார் 09.00க்கு நாங்கள் கிளம்பி போய்க்கொண்டு இருந்த போது, விருமாண்டி போன் செய்து, உடனே சீக்கரம் வாங்க, உங்க மக உடம்பு முடியாம இருக்கு என்று சொன்னார். பின்னர் எனது சித்தப்பா சமுத்திரபாண்டி எங்களுக்கு போன் செய்து கீழக்குடிக்கு உடனே போங்க என்று சொன்னார். அப்போது எனது அம்மா, சித்தி சந்திராவிற்கும், அத்தை ஜோதிக்கும் போன் அடித்து சிவப்பிரியா உடம்பு சரியில்லாம இருக்கு, உடனே வேகமா வாங்க என்று சொன்னார். நாங்கள் போய் பார்த்தபோது, எனது அக்காவை போர்வையால் பொத்தி வைத்திருந்தார்கள். எனது அம்மா போர்வையை எடுத்துப் பார்த்த போது எனது அக்கா இறந்திருந்தார். 1 வது எதிரியிடம் எனது அம்மா கேட்டதற்கு,

சிவப்பிரியா தூக்கு மாட்டிக்கிடுச்சு என்று சொன்னார். சம்பவ இடத்திற்கு ஜோதி, மதுபாலா, நாகேந்திரன், அவரது மனைவி ஆகியோர் எனது அக்காவை வைத்திருந்த வீட்டிற்கு வந்தார்கள். அதன் பிறகு சுமார் 10.00 மணிக்கு எனது அக்காவை, 1 வது எதிரி, சின்னசாமி, மலைச்சாமி, சிவப்பிரகாஷ், சாந்திபூசன், ஆகிய நான்குபேரும் ஆட்டோவில் ஏற்றினார்கள். ஆட்டோவில் எனது அக்காவை ஏற்றும்போது எனது அம்மா மயங்கி கீழே விழுந்துவிட்டார். (மேற்படி நபர்களை நான் பார்த்தால் அடையாளம் தெரியும். அவர்கள் இந்த வழக்கில் ஆஜர் ஆகாததால், பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது), எனது அம்மா மயங்கிவுடன் அவரை புதுக்கோட்டை மருத்துவமனைக்கு, நான், எனது சித்தி ஆகியோர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தோம். ஆஸ்பதிரியில் எனது அம்மாவை விட்டுவிட்டு, நான் எனது அக்கா வீட்டிற்கு இறந்ததை பார்க்க வந்தேன். ஆட்டோவில் எனது அக்காவை ஏற்றிக்கொண்டு போய் எரித்துக்கொண்டிருந்தார்கள். ஆட்டோவில் ஏற்றும்போது எனது அக்காவிற்கு நைட்டி கிழிந்து இருந்தது. அதனால் அவரை குப்புற வைத்திருந்தார்கள். விருமாண்டி, மூவேந்திரன் ஆகியோரைத்தான் நான் எரிக்கும் இடத்தில் பார்த்தேன். அத்தை மகள் மதுபாலா 100 க்கு போன் செய்து தகவல் சொன்னார். உடனே புதுக்கோட்டை ஸ்டேசனில் இருந்து ஆட்கள் வந்தார்கள். RDO வருவதாக சொன்னார்கள். பின்னர் RDO வந்து விசாரித்தார்கள். அதன் பிறகு 03..00 மணி வரை RDO விசாரணை செய்தார்கள். RDO விசாரணை செய்துவிட்டு புதுக்கோட்டை ஸ்டேசனில் கம்ப்ளெண்ட் கொடுக்க சொன்னார். நானும் எனது அம்மா, எனது மாமா ஆகியோர் ஸ்டேசனுக்கு சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் அதசாஆ.1 தான். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். **அந்த கையெழுத்து அதசாஆ.3 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

கீழக்குயில்குடி, ஒத்தவீடு என்ற இடத்தில் சுமார் 100 வீடுகள் இருக்குமா என்றால் தெரியாது. கீழக்குயில்குடி பஸ் ஸ்டாப்பில் இருந்து 1 வது எதிரியின் வீடு சுமார் 3 பர்லாங்கு தூரம் இருக்கும் என்றால் கூடவே இருக்கும். சுற்றி இருக்கும் எல்லா ஊர்களுக்கும் ஒரே சுடுகாடு என்றால் தெரியாது. எனது உறனவினர்கள் அனைவரும் அன்று காலை சுமார் 10.00 மணிக்கு வந்தார்கள். எனது அம்மா மயக்கம் போட்ட போது மணி சுமார் 10.00, 10.15 மணி இருக்கும். நான், காலை 08.30 மணிக்கு போன் வந்தவுடன் எனது பைக்கில் தான் எனது அம்மாவை கூட்டிவந்தேன். நான் குடியிருக்கும் சொரிக்காம்பட்டிக்கும், எனது அம்மா இருக்கும் பெருமாள்கோவில் பட்டிக்கும் இடைய  எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் இரண்டும் ஒரே ஊர் தான். எங்கள் ஊரில் இருந்து கீழக்குயில் குடி சுமார் 15 கிமீ தூரத்தில் உள்ளது. போனில் தகவல் வந்தவுடன் எனது அக்காவை பார்க்க, கொஞ்ச நேரம் கழித்து சுமார் 09.15 மணிக்கு கிளம்பினோம். எவ்வளவு நேரத்தில் எனது அக்கா வீட்டிற்கு சென்றோம் என்றால் சுமார் 1/4 மணி நேரத்தில் சென்று சேர்ந்தோம். நாங்கள் சென்ற போதே கீழக்குயில்குடியைச் சேர்ந்த நபர்கள் அங்கு கூடியிருந்தார்கள் என்றால் சரியல்ல.  சுமார் 4 நபர்கள் இருந்தார்கள். அந்த 4 நபர்கள் என்பது விருமாண்டி வீட்டு ஆட்கள் தான் இருந்தார்கள். 1 வது எதிரியின் பக்கத்து வீட்டுக்காரர்கள் இருந்தார்கள். ஊரில் மற்றவர்கள் விஷயம் தெரிந்து சுமார் 1/4 மணி நேரத்தில் வந்துவிட்டார்கள். கீழக்குயில்குடியில் உள்ள அக்கம் பக்கத்து வீட்டினர்கள் கூடினார்களா என்று நான் சரியாக கவனிக்கவில்லை. 1 வது எதிரியின் வீட்டில் இருந்து சுடுகாட்டிற்கு நடந்து செல்ல சுமார் 10 நிமிடம் அல்லது 1/4 மணி நேரத்தில் சென்றுவிடலாம். நான் சுடுகாட்டிற்கு எனது பைக்கில் தான் சென்றேன். கழுவத்தேவர் எதில் வந்தார் என்று தெரியாது. சுடுகாட்டில் வைத்து கழுவத்தேவர் நகைகளை வாங்கவில்லை. எனது அக்காவின் உடம்பில் போட்டிருந்த நகைகளை எரிப்பதற்கு முன்பு யார் வாங்கினார்கள் என்று நான்

பார்க்கவில்லை. நான், கழுவத்தேவர், எங்களது சித்தப்பா, பெரியப்பா மக்கள் எல்லாரும் இருந்து தான், எனது அக்காவின் உடலை எரிப்பதற்கு முன்பு வாங்கிக்கொண்டோம் என்றால் சரியல்ல. எனது அக்கா 4 மாதம் கர்ப்பமாக இருந்தார். 4 மாத கர்ப்பமாக இருந்தால், நாங்கள் எனது அக்காவை ஏதாவது மருத்துவமனைக்கு அழைத்து சென்று உறுதிசெய்துகொண்டோமா என்றால் எனது அம்மாவிற்கு தான் தெரியும். மற்ற சொந்ததக்காரர்கள் எல்லாரும், செல்லூர், வாடிப்பட்டி, சமயநல்லூர் போன்ற தூரத்து ஊர்களில் உள்ளவர்கள். RDO கீழக்குயில்குடி ஒத்தவீட்டிற்கு அவரது ஜீப்பில், போலிசாருடன் தான் வந்தார். RDO கீழக்குயில்குடிக்கு வந்போது மணி சுமார் பகல் 12.00 இருக்கும். எனது அக்காவை எங்கு வைத்து எரித்தார்கள் என்று RDO வை நான் அழைத்து சென்று காட்டினேனா என்றால் நான் காட்டவில்லை. அவர்களாகவே சென்று பார்த்துவிட்டார்கள். அவர்களே பார்த்துவிட்டு தான் நாங்கள் கூட்டமாக இருந்த வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. வீட்டில் விசாரித்து விட்டு தான் எரித்த இடத்தை சென்று பார்வையிட்டார்கள். 1 வது எதிரியின் வீட்டில் வைத்து RDO விசாரணை செய்த போது, நான், எனது அத்தை, எனது சித்தப்பா ஆகியோர் இருந்தோம். அதே போல், 1 வது எதிரி விருமாண்டி, அவரது அம்மா, அப்பா, 1 வது எதிரியின் அண்ணன் ஆகியோரும் அப்போது உடன் இருந்தார்கள். RDO வந்து போன பிறகு எங்களுக்குள் சண்டை வந்ததா என்றால் வரவில்லை. RDO விசாரிக்கும் போது, எரிச்சது, சிவப்பிரியாவின் அம்மா, அவரது சித்தப்பா, அவரது சித்தி ஆகியோர் தான் வந்து எரித்தார்கள் என்று ஊர் மக்கள் தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. 12.00 மணிக்கு RDO வந்து கீழக்குயில்குடிக்கு வந்து விசாரணை செய்து முடித்த பிறகு மாலை 05.00 மணி வரை கீழக்குயில்குடியில் தான் இருந்தோம். எனது அம்மா, உடல் நிலை சரியில்லாமல் மயக்கம்போட்டு விழுந்தபிறகு, அவரை எந்த மருத்தவமனைக்கு அழைத்து சென்றேன் என்றும், எந்த மருத்துவர் எனது அம்மாவிற்கு வைத்தியம் பார்த்தார் என்று இது வரை நான் யாரிடமும் சொல்லவில்லை. அதசாஆ.1 ஐ நான் தான் எழுதினேன். காவல்நிலையத்தில்

வைத்து எழுதினேன். காவல்நிலையத்திற்கு நான் சென்ற போது மாலை சுமார் 04.00, 04.30 மணி இருக்கும். அது வரை கீழக்குயில்குடியில், நான், எனது அம்மா, எனது சித்தப்பா, எனது அத்தை ஆகியோர் இருந்தோம். எங்கள் உறவினர் ஒன்றிய செயலாளர் பெயர் சுப்பு, செல்லூரைச் சேர்ந்தவர். அவரும் எங்களுடன் இருந்தார்.RDO விசாரிக்கும்போதும் சுப்பு எங்களுடன் தான் இருந்தார். அவர் அரசியலில் அப்போது ஆளும்கட்சியாக இருந்த அதிமுக கட்சியில் செல்வாக்கான பதவியில் தான் இருந்தார் என்று எனக்குத் தெரியாது. ஒன்றியச் செயலாளர் பதவி செல்வாக்கான பதவி என்று எனக்குத் தெரியும். எனது அக்கா தூக்குப் போட்டுக்கொள்வதற்கு முன்பு, நானும் எனது மற்றொரு தங்கையும், வெவ்வேறு சமயங்களில் விஷம் அருந்தி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம் என்றால் சரிதான். எனது அக்கா சிவப்பிரியாவிற்கு திருமணம் பேசும் போது நான் இல்லை. சம்பவம் வரைக்கும் 1 வது எதிரி விருமாண்டி என்னுடன் நல்ல நட்போடு தான் இருந்தார். நான் தெரியாதனமா விஷம் சாப்பிட்ட போது, என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதும், ஆஸ்பத்திரியில் எனக்கு உதவியாக இருந்ததும், ஆட்டோவில் அழைத்து சென்றதும் 1 வது எதிரி விருமாண்டி தான். எனது தங்கை ஏன் மருந்து குடித்தார் என்று எனக்குத் தெரியாது என்றால் பேன் மருந்தை விளையாட்டாக குடித்துவிட்டார். எனது வீட்டில் எல்லாருக்குமே மற்றவர்களை பயமுறுத்துவற்கு விளையாட்டாக விஷம் குடிப்பது வழக்கம் என்றால் சரியல்ல. 4 மாத தாம்பத்தியத்தில் 1 வது எதிரிக்கும், எனது அக்கா சிவப்பிரியாவிற்கும் எந்த சண்டை சச்சவரவும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. எனது அக்கா சிவப்பிரியாவும், அடிக்கடி மற்றவர்களை பயமுறுத்துவதற்காக மருந்து குடிப்பது, தற்கொலை செய்துகொள்ள போகிறேன் என்று மிரட்டுவது வழக்கம் என்றால் சரியல்ல. அது போன்று தெரியாத்தனமாக செய்யப்போய் தான் இது போல் விபரீதமாக முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. எனது அக்கா சிவப்பிரியா, தற்கொலை செய்துகொள்ளுமாறு ஒரு காரியம் செய்யும்போது, 1 வது எதிரி ஆட்டோவை

எடுத்துக்கொண்டு சவாரி சென்றிருந்தார் என்றும், எங்கள் உறவினர் ஜெயப்பிரகாஷ் தான் கதவை உடைத்து பார்த்துவிட்டு, 1 வது எதிரிக்கு தகவல் சொல்லியுள்ளார் என்ற விபரத்தை நான் கேள்விப்பட்டேன். ஆனால் அது உண்மை இல்லை. அதற்கு பிறகு சவாரி போயிருந்த 1 வது எதிரி வீட்டிற்கு திரும்பி வந்து, எனது அக்காவை விஜய் மருத்துவமனைக்கு கொண்டு சென்று காட்டிய போது, எல்லாம் முடிஞ்சு போயிடுச்சு என்று சொன்ன பிறகு தான் எனது அக்காவை 1 வது எதிரி வீட்டிற்கு கொண்டுவந்தார் என்ற விபரத்தைச் சொன்னார்கள். 1 வது எதிரி எனது அக்காவை வீட்டிற்கு கொண்டுவந்து வைத்துவிட்டு, நாங்கள் 1 வது எதிரியின் குடும்பத்தின் மீது புகார் கொடுத்துவிடுவோம் என்று பயந்து, எங்களுக்கு தகவல் சொன்ன போது, நாங்கள் தான் தற்கொலை செய்து கொண்டதாக சொன்னால், மற்றவர்களும் விஷம் குடிக்கும் பழக்கம் உண்டு என்று ஊருக்கே தெரிந்த விஷயம் என்பதால், 2 வது பெண்ணிற்கு திருமணம் நடக்காது என்று நாங்கள் தான் எனது அக்காவின் உடலை எரித்துவிட்டோம் என்றால் சரியல்ல. கீழக்குயில்குடி ஊரில் இருக்கிற மக்கள் தான், இப்படி அராஜகமாக பிள்ளையின் உடலைக் கொண்டு சென்று எரிக்கிறார்களே என்று RDO க்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரியல்ல. RDO வந்தவுடன் ஊர்மக்கள் எல்லாம் நடந்த விஷயத்தை சொன்னதால் தான் எங்கள் மீது கேஸ் வந்துவிடும் என்று பயந்து, இந்த வழக்கின் பொய்யான புகாரினை கொடுத்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான், காலையில் 09.30 மணியிலிருந்து ஊரில் இருந்து சொந்தக்காரர்கள் எல்லாம் வந்த பிறகும், எனது அக்காவின் உடலை நாங்கள் எல்லோரும் சேர்ந்து எரியூட்டிய போது யாரும் தடுக்கவில்லை என்றால் சரியல்ல. சுடுகாட்டில் வெட்டியான் இருந்தாரா என்றால் தெரியாது. ஒரு உடலை எரிக்கவேண்டும் என்றால் எவ்வளவு விறகுகள் வேண்டும், எங்கிருந்து விறகுகள் கொண்டு வரவேண்டும் என்று எனக்குத் தெரியாது. அது எல்லாம் கொண்டுவந்தால் தான் உடலை எரிக்கமுடியும் என்று தெரியும். அதனால் நான் சொன்னது

போல், யாருக்கும் தெரியாமல் மறைத்து எரிக்கமுடியாது என்றாலும், எனது குடும்பத்தார் சேர்ந்து எரித்தோம் என்றால் சரியல்ல. கீழக்குயில்குடி ஊரே சேர்ந்து தான் எதிரிகள் பிரேதத்தை எரித்தார்கள். ஆனால் நாங்கள் அதில் இல்லை. எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும், ஊரே கூடி எரித்தார்கள் என்று நான் சொல்லவில்லை. நான் கைப்படி எழுதிக்கொடுத்த புகாரில், நகையைக் கேட்டு தொந்தரவு செய்தார்கள் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பதட்டத்தில் எழுதவில்லை. காலை 09.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று, மாலை 05.00 மணிக்கு காவல் நிலையம் செல்லும்வரை நான் பதட்டம் இல்லாமல் தான் இருந்தேன் என்றால் சரிதான். பதட்டத்தில் எழுதாமல் விட்டுவிட்டேன் என்று சொல்வது நன்றாக யோசித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு எங்கள் குடும்பத்தின் மீது போடப்பட வேண்டிய வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகள் 1 முதல் 14 வரை அனைவரும் எங்கள் உறவினர்கள் என்றால் சரிதான். எங்களுக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நடுநிலையாளர்களை போடாமல் எனது உறவினர்கள் சாட்சிகளாக போடப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் சகோதரி மற்றும் நான், விளையாட்டுக்கு மருந்தை குடித்தது போல, எனது சகோதரி சிவப்பிரியாவும் விளையாட்டுக்கு தற்கொலை முயற்சி செய்து, அது வினையாக முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்த சிவப்பிரியா எந்த கொடுமைக்கும் ஆட்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் இன மக்களில், நகையை அடகு வைத்து வட்டிக்கு விடுவது வழக்கம் என்றால் இல்லை. எனது அம்மா, அன்றைய தினம், 1 வது எதிரியின் அம்மாவிடம் வாங்கிய பணத்தை திரும்ப குடுக்கத்தான் வந்துகொண்டிருந்தார் என்றால் சரிதான். அந்த பணத்தை எப்போது எனது அம்மா வாங்கினார் என்று தெரியாது. எனது அம்மாவுக்கும், 1 வது எதிரியின் அம்மாவுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளது பற்றி எனக்குத் தெரியாது. நான் எனது அம்மாவிடம், எப்போது எதற்காக இந்த பணம்

வாங்கினார்கள் என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. பணம் ரூ.10,000/- ஐ திரும்ப கொடுக்க கொண்டுவந்ததை தெரிந்து கொண்டேன். எனது தாயார் தான் எதிரியிடம் இருந்து பணம் வாங்கியிருந்தார். அதனால் நான் சொல்வது போல் எனது அக்காவிற்கு துன்புறுத்தலோ, கொடுமையோ அந்த வீட்டில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. பகல் 12.00 மணிக்கு RDO வந்து விசாரிக்காமல் இருந்திருந்தால், இந்த வழக்கை மூடி மறைத்து இருப்போம் என்றால் சரியல்ல. RDO வந்தபோது, எனது உறவினர் சுப்பு அவரது அதிகார பலத்தை பயன்படுத்தி, எங்களை தப்பிக்க வைத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | திருமதி. ஜோதி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.06.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை, செல்லூரில் குடியிருந்து வருகிறேன். மீன் வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். ஆஜர் எதிரி எனது நாத்தனார் பாக்கியலெட்சுமியின் சம்பந்தி ஆவார். எனது நாத்தனார் மகளை ஆஜர் எதிரியின் மகனுக்கு கட்டிக்கொடுத்தோம். நான் படிக்கவில்லை. அதனால் தேதி தெரியவில்லை. பாக்கியலெட்சுமியின் மகள் சிவப்பிரியாவை ஆஜர் 1 வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். 9 மாதங்கள் இருக்கும் கட்டிக்கொடுத்தோம். கல்யாணத்திற்கு 30 பவுன் நகை கேட்டார்கள். நாங்கள் போட்டோம். திருமணத்திற்கு பிறகு சிவப்பிரியா 4 மாத கர்ப்பிணியாக இருந்தார். சிவப்பிரியாவின் மாமியார் நகை கேட்டார். சிவப்பிரியாவிற்கு 9 மாதத்தில் வளைகாப்பு நடந்த பின்னர், நகை போடுகிறோம் என்று எனது நாத்தனார் பாக்கியலெட்சுமி சொன்னார். ஆனால் எதிரிகள் எங்களால் அவ்வளவு நாள் இருக்க முடியாது, உடனே நகை வேண்டும் என்று கேட்டார்கள். பின்னர் 10 நாட்களிலேயே சிவப்பிரியா வீட்டிற்கு வந்துவிட்டார். நாங்கள் சிவப்பிரியாவிடம், கொஞ்சநாள் பொறுமா, நகை

போடுகிறோம் என்று சொன்னோம். அதற்கு பிறகு, சிவப்பிரியாவை அனுப்பிவிட்டோம். அதற்கு பிறகு 4 நாட்களில் சிவப்பிரியாவிற்கு சுகம் இல்லை என்று போன் போட்டார்கள். என்னப்பா என்று கேட்போது, வீட்டில் வந்து பாருங்க என்று சொன்னார்கள். நாங்கள் 1 வது எதிரி வீட்டிற்கு சென்று பார்த்தபோது, சிவப்பிரியா செத்துப்போய், போர்வையில் அவளை பொத்தி வைத்திருந்தார்கள். நகை கொடுக்கவில்லை என்று சொல்லி சிவப்பிரியாவை கொடுமைப்படுத்தி டார்ச்சர் செய்து கொன்றுவிட்டார்கள். சிவப்பிரியாவின் சாவு மர்மமாக உள்ளது. அந்த பிள்ளையை நாங்கள் பார்த்தவுடன் எங்களிடம்எதும் சொல்லாமலே, ஆட்டோவில் வைத்து, 4 பேர் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டார்கள். அந்த 4 பேரை பார்த்தால் அடையாளம் தெரியும். (4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது). அதன் பிறகு நாங்கள் போலிசில் போய் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

அசா1 எனது நாத்தனார். அசா1 எனது கணவரின் சகோதரி ஆவார். 1 வது எதிரியின் பெயர் விருபாண்டி, 2 வது எதிரி பெயர் விருமாயி. 1 வது எதிரியின் வீட்டிற்கு நான் சீர் கொண்டு போகும் போது போயிருக்கிறேன். 1 வது எதிரியின் வீட்டை சுற்றி எத்தனை வீடுகள் உள்ளது என்று தெரியாது. எனக்கு சம்பவம் குறித்து எத்தனை மணிக்கு தகவல் சொன்னார்கள் என்றால் நான் செல்லூரில் மீன் விற்றுக்கொண்டு இருந்தேன். மணி பார்க்கவில்லை. சிவப்பிரியாவிற்கும், 1 வது எதிரிக்கும் திருமணத்திற்கு தான் போயிருந்தேன். நிச்சியதார்த்ததுக்கு போகவில்லை. யார், யார் எல்லாம் பேசி திருமணத்தை முடிவு செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. எங்கள் சமுதாய வழக்கப்படி அவர் அவர் தகுதிக்கு ஏற்ப பிள்ளைகளுக்கு நிறை நகைகள் போட்டும்., பண்ட பாத்திர சீர்வரிசைகள் நிறைய கொடுத்தும் அனுப்பி வைப்பார்கள். சீர்வரிசைக்கும், வரதட்சணைக்கும் வித்யாசம் தெரியும். 10 பவுன் நகை கூடக்

கேட்டார்கள் என்று யார் சொல்லி நான் தெரிந்து கொண்டேன் என்றால் எனது நாத்தனார் அசா1 சொல்லி தெரிந்து கொண்டேன். நான், கீழக்குயில்குடி ஒத்த வீட்டிற்கு எனது மகனுடன் பைக்கில் சென்றேன். நான் சென்றபோது மணி என்ன இருக்கும் என்று தெரியாது. நான் சென்று எவ்வளவு நேரம் கழித்து RDO அம்மா வந்தார்கள் என்றால் டையம் எல்லாம் பார்க்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்து வந்தார்கள். அந்த கொஞ்ச நேரமும், எனது வீட்டார்களுக்கும், 1 வது எதிரியின் வீட்டார்களுக்கும் இடையே சண்டை சச்சரவு ஏற்பட்டதா என்றால் நாங்கள் போகும்போதே தூக்கிச் சென்று எரித்துவிட்டார்கள். இறப்பு மர்மமாக இருந்ததால் சண்டை சச்சரவு போடவில்லை. RDO அம்மா வந்துகொண்டு இருப்பதாக தகவல் வந்ததால் சண்டை போடவில்லை. நான் சுடுகாட்டிற்கு சென்றேனா என்றால் போகவில்லை. அதனால், என்ன நடந்தது, ஏன் நடந்தது, எப்படி நடந்தது என்று தெரிந்துகொள்ளாமலே, எனது நாத்தனார் அசா1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நிரபராதிகள் என்றால் சரியல்ல. சிவப்பிரியாவின் சடலத்தை எரித்ததே எங்கள் ஆட்கள் தான் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை